# நம் சுகாதாரத்தைப் பராமரிப்போம்



# நோய்த்தடுப்பு, முதுமைக்காலப் பராமரிப்பு மேம்படுத்துதல்



## மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தின் அண்மைய நிலவரம்

2023 ஜூலை மாதம் தொடங்கப்பட்ட மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டம், நோய்த்தடுப்பு பராமரிப்பு மீதான கவனத்தை வலுப்படுத்தும் நோக்குடன் நமது சுகாதார பராமரிப்பு முறையில் முக்கிய உருமாற்றத்தை ஏற்படுத்தியது. 2024 பிப்ரவரி மாத நிலவரப்படி, 765,000 குடியிருப்பாளர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த குடும்ப மருத்துவரின் மருந்தகத்தில் பதிவு செய்துள்ளனர். அதோடு, 1,000க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவர்கள் (GPs) மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தில் பங்குபெறுகின்றனர்.

### குடியிருப்பாளர்கள் மேலும் ஆரோக்கியமாக வாழ ஆற்றல் அளிக்கப்படும்

மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தின்கீழ், குடியிருப்பாளர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள குடும்ப மருத்துவருடன் சேர்ந்து தனிப்பட்ட சுகாதாரத் திட்டத்தை உருவாக்குவர். அவர்களது உடல்நிலை, பராமரிப்பு விருப்பங்கள், செயல்திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சுகாதாரத் திட்டம் புதுப்பிக்கப்படும்.

- குடியிருப்பாளர்கள் தங்களது சுகாதார இலக்குகளை அடைவதற்கு ஆதரவாக, மேலும் குறிப்பிட்ட வாழ்க்கைமுறை பரிந்துரைகளும் காலப்போக்கில் சுகாதாரத் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.
- Healthy 365 செயலி படிப்படியாக மேம்படுத்தப்படும். சுகாதார மேம்பாட்டு வாரியம், மக்கள் கழகம், சிங்கப்பூர் விளையாட்டு மன்றம், துடிப்பாக முதுமையடையும் நிலையங்கள் ஆகியவை நடத்தும் சமூகம் சார்ந்த பலதரப்பட்ட நடவடிக்கைகளும் நிகழ்ச்சிகளும் செயலியில் பட்டியலிடப்படும்.

### ஆதார அடிப்படையிலான தரமான பராமரிப்பு வழங்க தனியார் மருத்துவர்களுக்கு ஆதரவளிக்கப்படும்

பராமரிப்பு நெறிமுறைகள் குடும்ப மருத்துவர்களுக்கு ஆதார அடிப்படையிலான, துல்லியமான மருத்துவ நிர்வாக வழிகாட்டுதலை வழங்குகிறது. இதன்வழி, குடியிருப்பாளர்கள் தேர்ந்தெடுக்கும் மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்தகம் எதுவாக இருந்தாலும், அவர்களுக்குச் சீரான, ஒருங்கிணைக்கப்பட்ட பராமரிப்பு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

- நாட்பட்ட நோயைச் சமாளித்தல் திட்டத்தின்கீழ் இடம்பெறும் நாட்பட்ட நோய்களுக்குக் கூடுதலான பராமரிப்பு நெறிமுறைகள் உருவாக்கப்படும்.
- பரிசோதனை மற்றும் நோய்த்தடுப்பு மருந்து பற்றிய விழிப்புணர்வை வளர்க்கவும், நாட்பட்ட நோய்களின் நிர்வாக முறையை மேம்படுத்தவும், மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி தனியார் மருத்துவர்களுக்கு முதன்மை பராமரிப்பு அமைப்பின் வாயிலாகக் குழு அடிப்படையிலான ஆதரவு வழங்கப்படும். தனியார் மருத்துவர்களுக்குப் பல துறைகளில் தேர்ச்சிபெற்ற பராமரிப்புக் குழுவின் ஆதரவு கிடைப்பதற்கு இச்சேவைகள் வழிவகுக்கும்.



## மூத்தோர் நலமாக மூப்படைய வழிவகுத்தல்.

“நலமாக மூப்படைதல்” எஸ்ஜி செயல்திட்டம் என்பது மூத்தோர் சமூகத்தில் நலமாக மூப்படைய உதவுவதற்காக சுகாதார அமைச்சு, தேசிய வளர்ச்சி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு ஆகியவை கூட்டாக வழிநடத்தும் தேசியத் திட்டமாகும்.

### துடிப்பாக முதுமையடைய ஊக்கமளித்தல்


- துடிப்பாக முதுமையடையும் நிலையங்களின் எண்ணிக்கை 157ல் இருந்து 2025-ஆம் ஆண்டுக்குள் 220 - ஆக விரிவடையும். அவை வழங்கும் நிகழ்ச்சிகளின் தரமும் மேம்படுத்தப்படும்.
- துடிப்பாக முதுமையடையும் நிலையங்களில் தொண்டூழியப் பணி புரிவதன்வழி பயன்மிக்க முறையில் ஈடுபாடுகொள்ள மூத்தோருக்கு ஊக்கமளிக்கப்படும்.

### பராமரிப்பு தேவைப்படும் மூத்தோருக்கான ஆதரவு வலுவாக்கப்படும்

- மேம்படுத்தப்பட்ட இல்லம் சார்ந்த தனிப்பட்ட பராமரிப்பு 11 இடங்களில் முன்னோட்டமாக அறிமுகமானது. கீழே விழுதல், விபத்துகள் போன்ற சம்பவங்களைத் தொழில்நுட்பத்தின் துணையுடன் கண்காணித்து உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுக்கும் 24 மணிநேரச் சேவையும் இதில் உள்ளடங்கும்.
- தேசிய வளர்ச்சி அமைச்சு, வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றுடன் சேர்ந்து செயல்பட்டு, சமூகப் பராமரிப்பு அடுக்குமாடி வீடுகளுடன், மூத்தோர் சமூகத்திலேயே மூப்படைய இன்னும் அதிகமான தெரிவுகள் வழங்கப்படும். புக்கிட் பாத்தோக்கில் கட்டப்படும் முதல் சமூகப் பராமரிப்பு அடுக்குமாடிக் குடியிருப்பு 2024 இறுதிக்குள் தயாராகிவிடும்.

### தங்குதடையில்லா பராமரிப்பு வழங்கப்படும்

- மூத்தோரும் அவர்களின் பராமரிப்பாளர்களும் மேலும் சீரான தங்குதடையில்லா பராமரிப்பு பெற, 2024 இரண்டாம் பாதியிலிருந்து பராமரிப்பு வழங்குநர்களுடனான ஒருங்கிணைப்பு படிப்படியாக மேம்படுத்தப்படும்.





## சிறுவர்கள் மற்றும் குடும்பங்களின் சுகாதாரத்திற்கும் நலனுக்கும் வழங்கப்படும் ஆதரவு வலுவாக்கப்படும்

**சிறு வயதிலிருந்து ஆரோக்கியமான பழக்கங்கள் வளர்க்கப்படும்**

- நல்ல உணவுப் பழக்கங்கள், சமச்சீரான சத்துள்ள உணவு வகைகள் பற்றிய இணைய இருவழித்தொடர்பு வளங்களை அணுகுதல் கல்வி அமைச்சின் மாணவர் கற்றல் மின்தளத்தின் வாயிலாகப் பள்ளிகளில் மேம்படுத்தப்படும்.
- சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்கள், பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் ஆகியோருக்குத் துணைபுரிய கைக்குழந்தைகள், பாலர்கள் ஆகியோருக்கான உணவூட்டல், உணவுண்ணல் வழிகாட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சமூகத்தில் இன்னும் பல சுகாதார, பிள்ளைவளர்ப்புச் சேவைகள் வழங்கப்படும்**

- சமூகத் தொடர்பு மையங்கள் தம்பதிகளுக்காக நடத்தும் கர்ப்பகால அறிவூட்டல் நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்படும்.
- சுகாதார, சமூகச் சேவைகளின் ஒருக்கிணைப்பை மேம்படுத்தவும், குடும்பங்களுக்கு ஒரே இடத்தில் சுகாதார, பிள்ளைவளர்ப்புச் சேவைகளை வழங்கவும் நான்கு இடங்களில் (தெம்பனிஸ், சுவா சூ காங், பொங்கோல், செம்பவாங்) குடும்ப இணைப்பகம் முன்னோட்டமாகத் தொடங்கப்பட்டது.





## மின்சிகரெட் தடுப்பு நடவடிக்கைகளின் அமலாக்க மற்றும் அறிவூட்டும் முனைப்புகளும் அதிகரிக்கப்படும்



சுகாதார அமைச்சு பல்வேறு அமைப்புகளுடன் தொடர்ந்து செயல்பட்டு, ஒட்டுமொத்த அரசாங்கத்தின் மின்சிகரெட் தடுப்புக்கான அமலாக்க, அறிவூட்டும் முயற்சிகளையும் அதிகரிக்கும்.

- இணையத்தளங்களில் மின்சிகரெட் விற்பனைகளையும் விளம்பரங்களையும் கண்டறிந்து நீக்கும் நடைமுறையை மேம்படுத்துமாறு இணையத்தள உரிமையாளர்களுக்கு நினைவூட்டப்படும்.
- சிங்கப்பூருக்குள் மின்சிகரெட்டுகள் கொண்டு வரப்படுவதைத் தடுத்து நிறுத்த எல்லைகளில் அதிகமான கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- பொது இடங்களில் மின்சிகரெட் வைத்திருப்பதையும் பயன்படுத்துவதையும் தடுக்க அதிக அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பள்ளிகளிலும் உயர்கல்வி நிலையங்களிலும் மின்சிகரெட் புழக்கத்தைக் கண்டறிந்து தடுக்கும் அமலாக்க முயற்சிகள் வலுப்படுத்தப்படும்.
- மின்சிகரெட்டின் தீமைகள், சட்டமீறல் பற்றிய விழிப்புணர்வு கூட்டப்படும்.
- மின்சிகரெட் குற்றங்களுக்கு எதிரான வலுவான தடுப்பாக, புகையிலை (விளம்பரம், விற்பனைக் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் தண்டனைகள் தொடர்ந்து மறுஆய்வு செய்யப்படும்.

# மருத்துவமனைகளுக்கு அப்பால் பராமரிப்பு வழங்கப்படும்



## சுகாதாரப் பராமரிப்பு திறனாற்றல் விரிவுபடுத்தப்படும்

முதுமை அடையும் நமது மக்களின் அதிகரித்துவரும் தேவைகளுக்கு ஆதரவளிக்க, மருத்துவமனை கொள்ளளவு சுமார் **4,000** படுக்கைகளுடன் விரிவுபடுத்தப்படும். புதிய சுகாதாரப் பராமரிப்பு வசதிகள் தொடங்கப்படும். நமது பலதுறை மருந்தகக் கட்டமைப்பு விரிவடையும்.

### 2024

- டான் டோக் செங் மருத்துவமனை ஒருங்கிணைந்த பராமரிப்பு மையம் முழுமையாகப் பூர்த்தி அடையும்போது சுமார் **600** படுக்கைகளைக் கொண்டிருக்கும்.
- உட்லண்ட்ஸ் ஹெல்த் மருத்துவமனையில் 2025 கடைசிக்குள் **700** படுக்கைகளும், முழுமையாகத் திறக்கப்படும்போது **1,000** படுக்கைகளும் இருக்கும்.
- சிங்கப்பூர் பொது மருத்துவமனை அவசர மருத்துவக் கட்டடம் சுமார் **150** படுக்கைகளுடன் 2024-ல் திறக்கப்படும்.
- கத்திப் பலதுறை மருந்தகம் 2024 மத்தியில் திறக்கப்படும்.
- மறுசீரமைக்கப்பட்ட பாசிர் ரிஸ் பலதுறை மருந்தகம் 2024 கடைசிக்குள் திறக்கப்படும்.

### 2026

- செங்காங் பொது மருத்துவமனையிலும் ஊட்ரம் சமூக மருத்துவமனையிலும் மருத்துவத்திற்குப் பயன்படாத சில இடங்கள் 2026-ஆம் ஆண்டிலிருந்து மருத்துவமனை படுக்கைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு, கொள்ளளவு கூட்டப்படும்.

### 2027

- சிங்கப்பூர் பொது மருத்துவமனை விரும்பும் சிகிச்சைக்கான நிலையம் **300** படுக்கைகளுடன் 2027-ஆம் ஆண்டுக்குள் திறக்கப்படும்.
- பிடாடரி, காக்கி புக்கிட், சிராங்கூன், தெங்கா, இயூ டீ வட்டாரங்களில் 2027-ஆம் ஆண்டுக்குள் **5** பலதுறை மருந்தகங்கள் கட்டி முடிக்கப்படும்.

### 2028-2030

- மறுசீரமைக்கப்பட்ட அலெக்சாண்ட்ரா மருத்துவமனையும் புதிய கிழக்கு பொது மருத்துவமனை வளாகமும் திறக்கப்படும்.
- புக்கிட் மேரா, கிளமெண்டி, ஜூரோங், ஊட்ரம், குயின்ஸ்டவுன், தோ பாயோ வட்டாரங்களில் உள்ள **6** பலதுறை மருந்தகங்களும் 2030-ஆம் ஆண்டுக்குள் மறுசீரமைக்கப்படும்.
- பீஷானிலும் தாமான் ஜூரோங்கிலும் 2030-ஆம் ஆண்டுக்குள் **2** பலதுறை மருந்தகங்கள் கட்டி முடிக்கப்படும்.

### 2030 க்கு அப்பால்

- தெங்கா நகரில் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட தீவிர மருத்துவப் பராமரிப்பு, சமூகப் பராமரிப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.






## உள்நோயாளிகளுக்கு வீட்டிலேயே பராமரிப்பளிக்கும் நடமாடும் சேவை (MIC@Home) விரிவுபடுத்தப்படும்

தகுதிபெறும் நோயாளிகள் மருத்துவமனை படுக்கைப்பிரிவுக்குப் பதிலாகத் தங்களது சொந்த வீட்டில் இருந்தபடியே பராமரிப்பு பெறும் வாய்ப்பை வழங்கும் உள்நோயாளிகளுக்கு வீட்டிலேயே பராமரிப்பளிக்கும் நடமாடும் சேவைக்கான சோதனைக்களச் சேவையை 2022 முதல் சுகாதார அமைச்சு நடத்தி வருகிறது.

2023 கடைசியில், 2,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் இந்தச் சேவையால் பலனடைந்துள்ளனர். இதன்வழி, 9,000க்கும் மேற்பட்ட மருத்துவமனை படுக்கை பயன்பாட்டு நாட்கள் மிச்சப்படுத்தப்பட்டன.

- உள்நோயாளிகளுக்கு வீட்டிலேயே பராமரிப்பளிக்கும் நடமாடும் சேவை, 1 ஏப்ரல் 2024 முதல், பொது மருத்துவமனைகள் வழங்கும் சேவைகளின் ஒரு பகுதியாக இடம்பெறும்.
- உள்நோயாளிகளுக்கு வீட்டிலேயே பராமரிப்பளிக்கும் நடமாடும் சேவையைப் பயன்படுத்தும் நோயாளிகள், மருத்துவமனையில் தங்கியிருக்கும் நோயாளியைப் போலவே, நிதி உதவிகள், மெடிசேவ், மெடிஷீல்டு லைஃப், ஒருங்கிணைந்த காப்புறுதித் திட்டம் ஆகியவற்றிலிருந்து பயனடைய முடியும்.
- உள்நோயாளிகளுக்கு வீட்டிலேயே பராமரிப்பளிக்கும் நடமாடும் சேவை 2024ல் அதிகபட்சம் 300 மெய்நிகர் படுக்கைகளை பொது மருத்துவமனையில் உள்ள தீவிரப் பராமரிப்பு படுக்கைகளின் கொள்ளளவை அதிகரிக்க வழங்க முடியும்.



## மனநலப் பராமரிப்பு சமூகச் சூழலுக்குக் கொண்டு செல்லப்படும்

### மனநல நிலைக்கேற்ற படிப்படியான பராமரிப்பு முறையின் அடிப்படையில் திட்டமிட்டப் பராமரிப்பு அளிக்கப்படும்

தேசிய மனநல நல்வாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2023 அக்டோபர் மாதம் அறிவிக்கப்பட்ட "மனநல நிலைக்கேற்ற படிப்படியான பராமரிப்பு முறை", மனநலச் சேவைகளுக்கு ஒரு வழிகாட்டியாகப் பயன்படும். மனநலப் பிரச்சனையின் அறிகுறிகள் எவ்வளவு கடுமையாக இருக்கின்றன என்பதன் அடிப்படையில், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பராமரிப்புச் சூழலுக்கு ஏற்ப பொருத்தமான பராமரிப்பு முறைகள் திட்டமிடப்படும்.

- மனநல மருத்துவச் சேவை வழங்குவோர் "மனநல நிலைக்கேற்ற படிப்படியான பராமரிப்பு முறைக்கு" ஏற்ப பராமரிப்பளிக்க வழிகாட்டும் நடைமுறை வழிகாட்டி 2024 இறுதிக்குள் உருவாக்கப்படும். வெவ்வேறு நிலைகளின் சேவை வழங்குநர்களுக்காக முன்சோதனை, பரிந்துரைப்பு, பராமரிப்பு ஒருங்கிணைப்பு நடைமுறைகள் நிலைப்படுத்தப்படும். தங்குதடையில்லாப் பராமரிப்பை இது உறுதிசெய்யும்.

### அடிப்படை மற்றும் சமூகப் பராமரிப்புச் சூழலில் மனநலச் சேவைகளின் அளவு கூட்டப்படும்

- 32 பலதுறை மருந்தகங்களுக்கும் மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி தனியார் மருந்தகங்கள் அனைத்துக்கும் 2030-ஆம் ஆண்டுக்குள் மனநலச் சேவைகள் விரிவுபடுத்தப்படும்.
- சமூகச் சேவை அமைப்புகள் நடத்தும் சமூகத்தைச் சென்றடையும் குழுக்கள் சமூக நலக் குழுக்கள் (CREST), சமூகத் தலையீட்டுக் குழுக்கள்(COMIT) ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். 2030-ஆம் ஆண்டுக்குள் CREST குழுக்களின் எண்ணிக்கை 73ல் இருந்து 90 ஆகவும், COMIT குழுக்களின் எண்ணிக்கை 29ல் இருந்து 50 ஆகவும் அதிகரிக்கும்.
- மனநலத் தேவைகளை அடையாளம் காண்பதற்கும், தகவல், உடனடியான மனநல ஆதரவு அல்லது பரிந்துரைப்புகள் போன்ற பொருத்தமான சேவைகளைப் பெறுவதற்கும் செல்லவேண்டிய இடமாகச் சமூகப் பராமரிப்புச் சூழலில் இயங்கும் முதல் தொடர்பு மையங்களைப் பற்றிய விழிப்புணர்வு உயர்த்தப்படும்.

### சமூக அடிப்படையிலான பராமரிப்புக்கு ஆதரவளிக்க மனிதவள ஆற்றல் மேம்படுத்தப்படும்

பல்வேறு பராமரிப்பு நிலைகளில் பணிபுரியும் மருத்துவத் துறையினரின் ஆற்றலை மேம்படுத்த தேசிய மனநல ஆற்றல் பயிற்சிக் கட்டமைப்பு தொடங்கப்பட்டது.

- பல்வேறு வகையான மனநலப் பிரச்சனைகளுக்கு ஆரம்பநிலைப் பயிற்சித் திட்டங்கள் அறிமுகமாகும். புலனுணர்வு நடத்தை சிகிச்சைக்கான பயிற்சியும் இதில் உள்ளடங்கும். சுகாதார அமைச்சும் சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சும், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்ச் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கூட்டிணைந்து பயிற்சித் திட்டங்களைத் தயாரிக்கும். இந்தப் பயிற்சித் திட்டங்களுடன், 2024 முதல் ஆண்டுக்கு ஏறத்தாழ 80 மருத்துவத் துறையினரின் திறன் மேம்படுத்தப்படும்.


# சுகாதாரப் பராமரிப்புக்கு வலுவான உத்தரவாதம் அளிக்கப்படும்

அனைத்து மக்களுக்கும் கட்டுப்படியாகும் செலவில் சுகாதார பராமரிப்பு தொடர்ந்து கிடைப்பதை உறுதிசெய்ய, சுகாதார அமைச்சு தனது நிதியளிப்புத் திட்டங்களை மறுஆய்வு செய்யும்.

## கட்டுப்படியாகும் சுகாதாரப் பராமரிப்புச் செலவுக்கு உத்தரவாதம் வழங்கப்படும்

மெடிஷீல்டு லைஃப் மன்றம் பின்வரும் அம்சங்களை மறுஆய்வு செய்யும்:

- நிதி உதவி பெறும் கட்டணங்களில் பத்தில் ஒன்பது கட்டணங்களை உள்ளடக்கும் வகையில், உள்நோயாளி மற்றும் பகல்நேர அறுவை சிகிச்சைகளுக்கான மெடிஷீல்டு லைஃப் கோரிக்கை வரம்புகள் புதுப்பிக்கப்படும்.
- இன்னும் அதிகமான வெளிநோயாளி, இல்லப் பராமரிப்பு முறைகளை உள்ளடக்கும் வகையில் மெடிஷீல்டு லைஃப் திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- உயிரணு, மரபணு, திசு சிகிச்சைப் பொருட்களை உள்ளடக்கும் வகையில் மெடிஷீல்டு லைஃப் திட்டம் விரிவுபடுத்தப்படும்.



## சமூக மருத்துவமனைகளில் வழங்கப்படும் உதவி நிதிகள் மேம்படுத்தப்படும்

தீவிரப் பராமரிப்பளிக்கும் மருத்துவமனைகளிலிருந்து வெளியேறும் நோயாளிகளுக்குச் சமூக மருத்துவமனைகள் துணைத்தீவிர, மறுவாழ்வுப் பராமரிப்பை வழங்குகின்றன.

- நோயைக் கண்டறியும் இன்னும் பல சேவைகளுக்கு, எடுத்துக்காட்டாக CT ஸ்கேன் பரிசோதனை போன்றவற்றுக்கு, 2024 நான்காம் காலாண்டிலிருந்து உதவி நிதி வழங்கப்படும். மருந்து உதவி நிதி ஆதரவளிக்கும் மருந்துகளுக்கு, 2025 முதல் காலாண்டிலிருந்து உதவி நிதி வழங்கப்படும்.
- சமூக மருத்துவமனை உதவி நிதி திட்டம், 2024 நான்காம், காலாண்டிலிருந்து தீவிரப் பராமரிப்பளிக்கும் மருத்துவமனையின் உதவி நிதி திட்டத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்படும்.



MINISTRY OF HEALTH
SINGAPORE

March 2024 | All information in this booklet is accurate at the time of printing.

